# துணை விதிகள்

## புத்தளம் பட்டினம்

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் புத்தளம் பட்டின விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்குரித்தக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
12.2.1970.

### துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

சவர்க்காரம் தயாரித்தல்
மீன் பதப்படுத்தல் அல்லது காயவைத்தல் அல்லது அதற்குப் பனிக்கட்டியிடுதல்
தோல்கள் அல்லது எலும்புகள் சேகரித்துவைத்திருத்தல்
இயந்திரத்தினால் மிளகாய்த்தூள் அரைத்தல்
நெல் குத்துதல் அல்லது குரக்கன் அரைத்தல்
பீடிகள் உற்பத்தி செய்தல்
சுருட்டுகள் உற்பத்தி செய்தல்
புகையிலை உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்
தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்
மரமரியும் இடங்கொன்றுவைத்திருத்தல்
பனிக்கட்டி (ஐஸ்) உற்பத்திச் சாலையொன்று வைத்திருத்தல்
விறகுக்காலையொன்று வைத்திருத்தல்
பசளை தயாரித்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்
பாக்குப் பதம் செய்தல்
தீந்தை அல்லது வார்னிஷ் சேகரித்துவைத்திருத்தல்
சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்

2. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

கொப்பரு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்
இயந்திரத்தினால் அல்லது செக்கினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்
ஆபரணங்கள் உற்பத்தி செய்வதற்கான நிறுவனமொன்று வைத்திருத்தல்
அச்சகமொன்று வைத்திருத்தல்
வெற்றுச்சாக்குகள் சேகரித்துவைத்திருத்தல்
நெல் குத்தும் இயந்திரங்கள் வைத்திருத்தல்
மோட்டார் வாகனங்கள் திருத்தும் அல்லது நன்னிலைச் சேவைபுரியும் இடமொன்று வைத்திருத்தல்
பைசிக்கிள் திருத்தும் நிலையமொன்று வைத்திருத்தல்
டயர், ரியூப் வல்கனைஸ் செயயும் தலமொன்று வைத்திருத்தல்
மூச்சுப்பானம் தயாரித்தல்
தச்சு வேலைக்கூடமொன்றை வைத்திருத்தல்
தேங்காய் மட்டைகள் ஊறப்போடும் காலையொன்று வைத்தல்
மண்ணெண்ணெய்க் குதமொன்று வைத்திருத்தல்
டீசல் எண்ணெய் சேகரித்து வைப்பதற்கான குதமொன்று வைத்தல்
மின்சார வேலைக்கூடமொன்று வைத்திருத்தல்
உலை அல்லது கொல்லுலையொன்று வைத்திருத்தல்
தகரக்கடையொன்று வைத்தல்
பழைய உலோகங்களைச் சேகரித்துவைத்திருத்தல்
வெற்றுப் போத்தல்களைச் சேகரித்துவைத்திருத்தல்
தளபாடக்கடையொன்று வைத்திருத்தல்

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

சுண்ணாம்பு சுடுதல் அல்லது பதப்படுத்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்
செங்கற்கள் அல்லது ஓடுகள் உற்பத்தி செய்தல்
பற்றறிகளுக்கு மின்னேற்றல்
ஒலிப்படக்கலைக்கூடமொன்று வைத்திருத்தல்.

3–2.—5.2.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,896

---

## பதுளை மாநகர சபை

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

1957 ம் ஆண்டின் 15 ம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டத்தின் 10 ம் பிரிவினால் திருத்தப்பட்ட (252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் பதுளை மாநகர சபையால் ஆக்கப்பட்டு 268 ம் பிரிவின் கீழ் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் மூதவையாலும் பிரதிநிதிகள் சபையாலும் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 19 ந் உ.

### துணைவிதிகள்

1. "பதுளைச் சந்தை" என வழங்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான சந்தை ஒன்று ஒவ்வொரு போயா நாளிலும், சபையால் நிச்சயிக்கப்படும் வேறெதுமொரு நாளிலும் சபையால் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. (1) ஆணையாளரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை உடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலையாளாக அல்லது முகவராக இருந்தாலன்றி அல்லது அத்தகைய அனுமதிச் சீட்டின் நிபந்தனைகளுக்கிணங்கவன்றி எவரும் சந்தையின்வளவில் உள்ள ஏதேனும் விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ ஆகாது.

(2) முதலாம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச்சீட்டும் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடிவத்தில் இருக்க வேண்டும் என்பதோடு அந்த அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டிருக்கப்படக்கூடியதான 12. மாதங்களுக்குக் கூடாததும் ஒரு மாதத்திற்குக் குறையாததுமான அத்தகையதொரு காலத்திற்கு வலுவுள்ளதாயிருத்தல் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுடைய ஒவ்வொருவரும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதங்களிலான ஒரு கட்டணத்தை சந்தையின் வளவிலுள்ள விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுத்தல் வேண்டும்.

4. மூன்றும் துணைவிதியின் கீழ் கொடுபடற்பாலதான கட்டணங்களை சேகரித்தற்கென அலுவலர் ஒருவரை சபையானது வேலையில் அமர்த்தாவிட்டால் அது கட்டணங்கள் சேகரித்தற்கான உரிமையை—

(அ) தனிப்பட்ட உடன்படிக்கை மூலம் அல்லது
(ஆ) கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மூலம், அல்லது
(இ) அந்த உரிமையை ஏலத்தில் விடல் மூலம்.
அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்குக் குத்தகைக்கு விடலாம்.

5. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுடையார் எவரும் ஆணையாளரின் அனுமதியின்றி—

(அ) அவரது அனுமதிச்சீட்டை வேறெவரேனும் ஆளுக்கு மாற்றுதல் கூடாது அல்லது,
(ஆ) அவருக்கென ஒதுக்கப்பட்ட விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை உப வாடகைக்கு விடலாகாது, அல்லது
(இ) அவரது வேலையாள் அல்லது முகவர் தவிர்ந்த வேறெந்த ஆளையும் அவருக்கொதுக்கப்பட்ட விற்பிடத்தில் அல்லது வெற்றிடத்தில் ஏதேனும் பகுதியைப் பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ விடலாகாது.

6. காலை 6.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் இடையில் சந்தை வளவிற்குள் ஆளெவரும்—

(அ) சந்தைக்கு வருகை தரும் எவரேனும் ஆளின் கைரேகையை வாசிக்கவோ கைரேகைவாசிக்க முன்வருதலோ அல்லது அன்னாருக்குக் குறிசொல்லுதலோ அல்லது
(ஆ) எந்தவகையான மருந்தையும் அல்லது மருந்துச் சரக்கையும் விளம்பரம் செய்தலோ, அல்லது
(இ) சந்தைக்கு வருகைதரும் ஆட்களிடம் இருந்து சந்தைவளவில் அல்லது வளவிற்கு அண்மையில் பிச்சை இரத்தலோ, அல்லது
(ஈ) குரவைப்பாடல்கள், பாடல்கள், அல்லது புத்தகங்கள் விளம்பரம் செய்தலோ வாசித்தலோ, பாடுதலோ—

ஆகாது.

இந்த அனுமதிச்சீட்டு 1968 ம் ஆண்டு .............. மாதம் ........ ஆம் திகதிவரை வலுவில் இருத்தல் வேண்டும் என்பதோடு இதன் பின்புறத்தில் காணப்படும் நிபந்தனைகட்கு அமைந்தாதல் வேண்டும்.

..............................

மாநகர சபை ஆணையாளர்.

திகதி : ......................

இதன் முற்புறத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள்.

(1) இந்த அனுமதிச்சீட்டை வேறெவருக்குக் கைமாற்றுதல் ஆகாது.

(2) விற்பிடத்தில் அல்லது வெற்றிடத்தில் எந்த ஒரு நாளிலேனும் வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பொருட்களுக்கும் அந்தப் பொருள்களுக்குரியவரே பொறுப்பு.

**இரண்டாம் அட்டவணை**

| | | நாளொன்றிற்கு ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 24 சற்சதுர அடி கொண்ட ஓர் இடப்பரப்பிற்கு .. | 2 00 |
| (ஆ) | 12 சதுர அடி கொண்ட ஓர் இடப்பரப்பிற்கு .. | 1 00 |
| (இ) | 6 சதுர அடி கொண்ட ஓர் இடப்பரப்பிற்கு .. | 0 50 |
| (ஈ) | 3 சதுர அடி கொண்ட ஓர் இடப்பரப்பிற்கு .. | 0 25 |
| (உ) | 3 சதுர அடிகளுக்குக் குறைந்த இடப்பரப்பிற்கு .. | 0 10 |

3–6—5.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,896

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களில் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.
(உள்ளூர்ச் சபைகள்)

கொழும்பு,
23.2.1970.

**அட்டவணை**

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| **யாழ்ப்பாணம் மாவட்டம்** | |
| **வட்டுக்கோடை கிராமச் சபை** | |
| 9 .. | வெற்றிவேற்பிள்ளை யோகேஸ்வரன் |
| **இரத்தினபுரி மாவட்டம்** | |
| **குருவிற்றி கோரலே மெதபத்து கிராமச் சபை** | |
| 4 .. | பஹலகம் நூரகே சயிமா |

3–30.—5.3.70. ந் திகதிய வர்த்தமானி இல. 14,896

---

## உள்ளூர்ச் சபைகளது தேர்தல்களின் முடிவுகள் தொடர்பான புள்ளிவிவரங்கள்

1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற தேர்தல்களது முடிவுகளின் கீழ்க்காணும் விவரங்கள் பொதுத் தகவலுக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

கொழும்பு,
22.2.1970.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி, உள்ளூர்ச் சபைகள்.

**யாழ்ப்பாண மாவட்டம்**

**வட்டுக்கோட்டை கிராம சபை**

**இடைத் தேர்தல் திகதி 29.1.1970**

| வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் | தேர்தல் இடாப்பில் உள்ள வாக்காளர் தொகை | அபேட்சகரின் பெயர் | ஒதுக்கப்பட்ட அடையாளம் | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 9 .. | 686 .. | 1. வெ. யோகேஸ்வரன் .. | குடை .. | 261 | 4 | 511 |
| | | 2. க. முருகேசன் .. | சேவல் .. | 177 | | |
| | | 3. வே. கந்தையா .. | தராசு .. | 69 | | |

**அம்பாரை மாவட்டம்**

**உடபளாத்தை கிராம சபை**

**தேர்தல் தினம் 21.1.1970**

| வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் | வாக்காளர் இடாப்பிலுள்ள வாக்காளரின் மொத்தத் தொகை | அபேட்சகர்களின் பெயர் | கொடுக்கப்பட்ட அடையாளம் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களுடன் மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 2 .. | 748 .. | நந்தசேன, ஜீ. எச். .. | யானை .. | 328 | 3 | 533 |
| | | விஜயரட்ன மகாவல, எஸ். எம். வீ. | கை .. | 193 | | |
| | | முனிபேம, எம். உவை. | தராசு .. | 9 | | |

3–14—5.3.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,896

